**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.155/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W–4 |
| Name | : | மாரியப்பன், வயது 53 |
| Father Name/Husband Name | : | முத்தையா |
| Village | : | கழுகுமலை |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கிரில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2025.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து கிரில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அதனை நான் காலங்கரைபட்டியில் கிரில் வேலைக்கு போன போது கடந்த 18.08.2023 ஆம் தேதி மதியம் 12.00 மணியளவில் சுந்தர மகாலிங்கம் வீட்டிற்கு முன்னால் வைத்து கழுகுமலை உதவி ஆய்வாளர் வந்து படம் வரைந்து மகஜரில் சாட்சியாக இருக்கும் படி கையொப்பம் கேட்டார்கள்.
2. படம் வரைந்து எழுதிய பேப்பரில் நானும் செல்வம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தோம். (**பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. வழக்கில் இறந்த நபர் உங்கள் உறவினரா என்றால் இல்லை. ஒரே சமூகத்தை சேர்ந்தவர் என்றால் ஆம். அவர் இறந்த துஷ்டிக்கு போனீர்களா என்றால் ஆம். கோவில்பட்டி அரசு

மருத்துவமனைக்கு போனீர்களா என்றால் இல்லை கழுகுமலைக்க போனோம்.

2. துஷ்டிக்கு போன இடத்தில் வைத்து தான் போலிசார் உங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் இல்லை நான் வேலைக்கு சென்ற போது தான் வாங்கினார்கள். காவல்துறையினர் கேட்டுக் கொண்டதற்கு இனங்க கையொப்பம் செய்து கொடுத்தீர்கள் என்றாலும் மேற்படி ஆவணம் காவல்நிலையத்தில் வைத்து உருவாக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.